# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## நிலையறிபரீட்சை-2021
## Diagnostic Test – 2021

| தரம் :- 10 | புவியியல்I,II<br>Geography I,II | நேரம் :-<br>3மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண்:............................... | 61 \| T \| I,II | மேலதிக வாசிப்பு நேரம் :-<br>10 நிமிடம் |

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## புவியியல் I

- இவ்வினாத்தாள் 40 வினாக்களைக்கொண்டுள்ளது.
- ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

- **1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்கு பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. மனித செயற்பாடுகளில் பெரும்பாலானவை உயிரினங்களின் வாழிடமான........................ கோளத்தில் இடம்பெறுகின்றன. ( கற் , நீர்க் , வளிக் )
2. புவியின் பிரதான பௌதிகப் பண்புகளாகத் தரைத்தோற்றமும் ,.................................... விளங்குகின்றன. ( நீரும் , காலநிலையும் , காடுகளும் )
3. உலக சனத்தொகையில் பெரும்பான்மையானோர் .............................. நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். ( விவசாய , கைத்தொழில் , மீன்பிடி )
4. சிறு ஏற்றுமதிப் பயிர்களின் ஆராய்ச்சி நிலையம் ............................ யில் அமைந்துள்ளது. ( பதுளை , கேகாலை , மாத்தளை )
5. ஆபிரிக்காவில் உள்ள நைல் நதி .............................. யிலிருந்து உற்பத்தியாகுகின்றது. ( பனி , மலை , ஏரி )

- **6 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியாயின் "ச" ஐயும் பிழையாயின் "பி" ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

6. கனிய வளங்களைப் பெற்றுக் கொள்வற்காக நிலங்களை அகழ்வதால் நிலம் தரமிழந்து வருகின்றது. ச / பி
7. நீரினால் சூழப்பட்ட பல்லுருவ அமைப்பில் காணப்படும் சிறிய நிலப்பரப்பு தீவு எனப்படும். ச / பி




kalvi.lk

8. உலகில் இடைவெப்ப வலயத்தில் அமைந்துள்ள பகுதிகளில் பாற்பண்ணைகள் அதிகளவில் பரம்பிக் காணப்படுகின்றது. ச / பி
9. ரன்ன , சிலாபம் , மித்தெனிய ஆகியவற்றை இணைக்கும் பகுதி சிறு தென்னை முக்கோண வலயம் எனப்படும். ச / பி
10. இடவிளக்கப் படமென்பது பௌதீக , பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்ட படமாகும். ச / பி

- **11 தொடக்கம் 19 வரையான வினாக்களுக்கு வெற்றிடத்துக்கு பொருத்தமான சொற்களைக் கொண்டு பூரணப்படுத்துக.**

11. புவியின் ……………………… சக்தி காரணமாக வளிமண்டலம் புவியுடன் இணைந்து காணப்படுகின்றது.
12. மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள தட்டையான உயர் நிலம்…………………. நிலம் எனப்படும்.
13. சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ………………………… தற்போது உலகின் அனைத்து நாடுகளிலும் பெருமளவு நுகரப்படும் பானமாக உள்ளது.
14. 1890 இல் பிரித்தானிய இனத்தவரான …………………………………….. அவர்களால் கம்பஹாவில் உள்ள கெனரத்கொட தோட்டத்தில் முதலாவது இறப்பர் மரம் நடப்பட்டது.
15. ஆரம்ப காலத்தில் இரும்புருக்குக் கைத்தொழில் ………………….. , நிலக்கரி , சுண்ணக்கல் படிவுகள் கூடுதலாக காணப்படும் நாடுகளில் அமைவு பெற்றிருந்தது.

- **16 தொடக்கம் 19 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் வரைபடத்தைப் பயன்படுத்துக.**




மூலம் - மத்திய வங்கி ஆண்டறிக்கை – 2012



kalvi.lk

மேற்குறிப்பிட்ட வரைபின்படி,

16. தேங்காய் உற்பத்தி கூடிய ஆண்டு எது? ……………………………………….
17. தேங்காய் உற்பத்தி குறைந்த ஆண்டு எது? ……………..
18. 2008 ஆம் ஆண்டைவிட 2011ஆம் ஆண்டில் எத்தனை மில்லியன் தேங்காய் உற்பத்தி குறைவாகக் கிடைத்தது. ? ……………..
19. 2009ஆம் ஆண்டின்இலங்கையின் தேங்காய் உற்பத்தி எத்தனை மில்லியன் ஆகும்? ……………….

- **20** தொடக்கம் **24** வரையான வினாக்களுக்கு **'அ'** மற்றும் **'ஆ'** என இரண்டு நிரலகள் தரப்பட்டுள்ளது. **'அ'**நிரலில் உள்ள தகவல்களுடன் **'ஆ'**நிரலைப் பொருத்திப் பார்க்கும் போது சரியான ஒழுங்கினைக் காட்டும் விடைக்குரிய **இலக்கத்தினை எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

20.

| நிரல்( அ ) **மலைகள்** | நிரல் ( ஆ ) **கண்டங்கள்** |
|---|---|
| 1. அற்லஸ்மலை | A. வடஅமெரிக்கா |
| 2. அல்ப்ஸ்மலை | B. ஐரோப்பா |
| 3. றொக்கிமலை | C. தென்அமெரிக்கா |
| | D. ஆபிரிக்கா |

1.ABC 2.DBA 3.DBC 4.BCD (……….)

21.

| நிரல் ( அ ) **மீன்பிடிப்பிரிவுகள்** | நிரல் ( ஆ ) **பிடிக்கப்படும் மீனினம்** |
|---|---|
| 1. கடல்நீர் மீன்பிடி | A. சில்வர்காப் , கட்லா |
| 2. நன் நீர் மீன்பிடி | B. நெத்தலி , சுறா |
| 3. உவர் நீர் மீன்பிடி | C. திலாப்பியா , சூடை |
| | D. இறால் , நண்டு |

1.BDC 2.ABC 3.BAD 4.CDB (……….)

22.

| நிரல் ( அ ) **பயிர்வகை** | நிரல் ( ஆ ) **ஏற்றுமதிக் கிராமங்கள்** |
|---|---|
| 1. நெல் | A. இராஜங்கனை |
| 2. முந்திரி | B. பொலன்னறுவை |
| 3. மிளகாய் | C. தம்பதெனிய |
| | D. கட்டுகம்பொல |

1.DAC 2.ACB 3.BCA 4.ABC (……….)



kalvi.lk

23. நிரல்( அ ) நிரல் ( ஆ )

| **இரும்புருக்கு உற்பத்தி நாடுகள்** | **அமைவிடக் காரணிகள்** |
|---|---|
| 1. ஜப்பான் | A. புவிமேற்பரப்பிலிருந்து இரும்புத்தாது கிடைத்தல் |
| 2. ஐக்கிய அமெரிக்கா | B. ஏற்றுமதி இறக்குமதிக்கான துறைமுகம்,காணப்படல் |
| 3. சீனா | C. போக்குவரத்துகு ஏரியைப் பயன்படுத்துதல் |
| | D. ஆற்றின் நீரின் மூலம் இலகுவான அடைகை |

1.ABD 2.BCA 3.DAB 4.BDA (……….)

24.

நிரல்(அ) நிரல்(ஆ)

| **மெற்றிக் படத்தில் நிறப்பயன்பாடு** | **பௌதீக பண்பாட்டு அம்சங்கள்** |
|---|---|
| 1. நீல நிறம் | A. நெற்பயிர்ச்செய்கை |
| 2. பச்சை நிறம் | B. சிறு வீதி |
| 3. மஞ்சள் நிறம் | C. நதி |
| | D. பிரதான வீதி |

1.CAB 2.BCA 3.DAB 4.BDA (……….)

- **25** தொடக்கம் **36** வரையுள்ள வினாக்களுக்கு நான்கு விடைகளுள் **சரியான** விடையைத் தெரிவுசெய்து. அதனைக் குறித்து நிற்கும் **இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

25. கீழே A தொடக்கம் E வரை தரப்பட்ட தகவல்களில் மாறன் மண்டலத்துக்கு பொருத்தமான இரண்டு தகவலை கொண்டிருக்கும் விடையை தெரிவுசெய்க.

A. மேலே செல்லச்செல்ல வெப்பநிலை வீழ்ச்சியடைதல்.

B. மேலே செல்லச்செல்ல வெப்பநிலை அதிகரித்தல்.

C. படிவு வீழ்ச்சி, வெப்பநிலை, அமுக்கம், முகில் உருவாக்கம்

D. நீராவி, முகில்கள், தூசு துணிக்கைகள் இல்லை.

E. வாயுக்களின் அளவு மிகக் குறைவு.

1.E யும் C யும் 2.D யும் C யும் 3.Aயும்Cயும் 4.Aயும்Dயும் (……….)

26. முழுவதும் நிலத்தால் சூழப்பட்ட கடல்கள் இரண்டினைக்கொண்ட விடைத்தொகுதி,

1. கஸ்பியன் கடல், ஏரல் கடல் 2. செங்கடல், ஏரல் கடல்
3. யப்பான் கடல், பால்ரிக் கடல் 4. சீனக்கடல், அரேபியன் கடல் (……….)

27. அதிக விளைச்சலைத்தரும் “நொரின் 10” எனப்படும் பயிரினம்,
1. நெற்பயிர் 2. கோதுமைப்பயிர் 3. தென்னை 4. முந்திரிகை (……….)

28. போம்புவல நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மாவட்டம்,
1. கண்டி 2. குருநாகல் 3. களுத்துறை 4. பொலன்னறுவை(……….)

29. அண்மைய காலத்தில் மோட்டார்வாகன உற்பத்தியில் முன்னணியில் திகழும் நாடாக அமைவது,
1. ஐக்கிய அமெரிக்கா 2. இந்தியா 3. யப்பான் 4. சீனா (……….)



kalvi.lk

30. நட்சத்திர அடையாளம் ஒன்றுடன் முடிவடையும் கோட்டினால் காட்டப்படுவது,
    1. உண்மை வடக்கு 2. காந்த வடக்கு 3. அளியடைப்பு வடக்கு 4. வடக்கு (……….)

31. அயனக்காலநிலை தொடர்பான **சரியான** கூற்றாக அமைவது,
    1. கடகக் கோட்டிற்கும் மகரக்கோட்டிற்கும் இடைப்பட்ட பகுதி
    2. கடகக் கோட்டிற்கும் ஆட்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்டது
    3. ஆட்டிக் வட்டத்திலிருந்து வடமுனைவு வரையானது.
    4. மகரக் கோட்டிற்கும் அந்தாட்டிக் வட்டத்திற்கும் இடையில் காணப்படுவது. (……….)

32. சீனா, யப்பான் போன்ற நாடுகள் அமைந்துள்ள புவித்தகடு யாது?
    1. ஆபிரிக்கத் தகடு 2. யுரேசியத்தகடு
    3. வட அமெரிக்கத்தகடு 4. இந்திய அவுஸ்திரேலியத்தகடு (……….)

33. ஆசியா மற்றும் அவுஸ்திரேலியாவில் காணப்படும் ஏரிகள் முறையே,
    1. பைக்கால், விக்டோரியா 2. ஐம்பெரும் ஏரியும், அயர் ஏரியும்
    3. சுப்பீரியர், தித்திக்கா 4. பைக்கால், அயர் ஏரி (……….)

34. ஆசியாவுக்கு வெளியில் நெல் பயிரிடப்படும் நாடுகளில் ஒன்று,
    1. இந்தோனேசியா 2. மியன்மார் 3. இத்தாலி 4. தாய்லந்து (……….)

35. முருங்கைக்காய், பூசணி போன்ற மரக்கறிவகைகள் உற்பத்தி செய்யப்படும் விசேடமானபிரதேசம்,
    1. ஈரவலயம் 2. வறண்ட வலயம் 3. மலைநாடு 4. கரையோரம் (……….)

36. இலங்கையில் முதல் முதல் கொவிட் - 19 தொற்று ஏற்பட்ட மாகாணம்,
    1. வடக்கு 2. மேல் 3. கிழக்கு 4. தெற்கு (……….)

- **A,B,C,D** ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து **37** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக?

A. 1.உள்நாட்டு நுகர்வு
   2.ஏற்றுமதி

B. 1.மண்வளம்
   2.தொடர்ச்சியான பயிர்ச்செய்கை

C. 1.விவசாயம்சார் கைத்தொழில்
   2.பயிர்ச்செய்கை

D. 1.தொற்று நோய்
   2.இறப்புக்கள்

37. முதலாவதின் அதிகரிப்பு இரண்டாவதின் வீழ்ச்சிக்கு காரணமாக அமையும் தலைப்புச் சோடி யாது?
    1. A 2. B 3. C 4. D (……….)

38. இரண்டாவதின் அதிகரிப்பு முதலாவதின் குறைப்புக்கு காரணமாக அமையும் தலைப்புச்சோடி யாது?
    1. A 2. B 3. C 4. D (……….)

39. இரண்டாவதின் அதிகரிப்பு முதலாவதின் வளர்ச்சிக்கு காரணமாக அமையும் தலைப்புச்சோடி யாது?
    1. A 2. B 3. C 4. D (……….)

40. முதலாவதின் வீழ்ச்சி இரண்டாவதின் வீழ்ச்சிக்கு காரணமாக அமையும் தலைப்புச்சோடி யாது?
    1. A 2. B 3. C 4. D (……….)

(40x1=40 புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்குமாகாணம்


## Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2021
## Second Term Examination – 2021

| தரம் :- 11 | புவியியல்II<br>Geography II | 61 T II |
|---|---|---|

பகுதி I

1. (அ) உமக்கு கீழே தரப்பட்டுள்ள 1:50000 அளவுத்திட்டத்திலமைந்த மாதிரிப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. விடை எழுத (பக்கம் 9) புள்ளிக் கோட்டைப் பயன்படுத்துக.




1:50,000

- **இலக்கம் (i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்குமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

i. A என்ற எழுத்தால் காட்டப்படுவது யாது?



kalvi.lk

(சுவடு, பள்ளத்தாக்கு, குத்துச்சாய்வு) (01 புள்ளி)

ii. C என்ற எழுத்தில் காட்டப்படும் விடயம் யாது?
( கணவாய், சுவடு, மலை உச்சி) (01 புள்ளி)

iii.B என்ற எழுத்தால் காட்டப்படுவது?
( கூம்புக்குன்று, மலைத்தொடர், நீள்குன்று ) (01 புள்ளி)

iv. D என்ற எழுத்தால் காட்டப்படவது யாது?
( திரிகோணகணித நிலையம், மலைஉச்சி, இடஉயரம் ) (01 புள்ளி)

- (v)தொடக்கம்(ix) வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை விடைத்தாளில் தரப்பட்டுள்ள வினா இலக்கத்துக்க எதிரே எழுதுக.

v. 1 என இலக்கமிடப்பட்டுள்ள பௌதீக அம்சம் யாது? (01 புள்ளி)
vi. 2 என இலக்கமிடப்பட்டுள்ள பண்பாட்டு அம்சம் யாது? (01 புள்ளி)
vii. 3 என இலக்கமிடப்பட்ட நிர்வாக எல்லை யாது? (01 புள்ளி)
viii. 4 என இலக்கமிடப்பட்ட பௌதீக அம்சம் யாது? (01 புள்ளி)
ix. 1:50000 என்ற அளவுத்திட்டத்தில் 12cm நீளமும் 10 cm அகலமும் கொண்ட பிரதேசத்தின்,
   a. நீள, அகலத்தை கிலோமீற்றரில் தருக? (01 புள்ளி)
   b. அதன் பரப்பளவையும் கிலோமீற்றரில்தருக? (01 புள்ளி)

(ஆ) உமக்குத் தரப்பட்டுள்ள உலகப்படத்தை பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுத உலகப்படத்தின் அருகே அமைந்துள்ள நிரல் பெட்டியைப் ( பக்கம் 10 ) பயன்படுத்துக.

(i) தொடக்கம் (iv) வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்து தரப்பட்டுள்ளது. உலகப்படத்தில் ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை குறித்துக்காட்டும் ஆங்கில எழுத்தை தெரிவு செய்து ஒவ்வொரு வினாஇலக்கத்துக்கும் எதிரேயுள்ள பெட்டியில் எழுதுக.

i. **அத்திலாந்திக் சமுத்திரம்** N,O,P
ii. **பால்டிக் கடல்** K,L,M
iii. **குவாங்கோ நதி** R,S,T
iv. எரிமலை செயற்பாட்டினால் தோற்றம்பெற்ற **ஐஸ்லாந்து தீவு** B, C, D
v. தென்ஆசிய நாடுகளில் ஒன்றான **இந்தியா** X,Y,Z (1x5 புள்ளிகள்)

(இ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தைப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்கு இலங்கைப் படத்தின் அருகே அமைந்துள்ள நிரல் பெட்டியைப் ( பக்கம் 10 ) பயன்படுத்துக.

(1) தொடக்கம் (5) வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்து தரப்பட்டுள்ளது இலங்கைப்படத்தில் ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை குறித்துக்காட்டும் ஆங்கில எழுத்தை தெரிவு செய்து ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள பெட்டியில் எழுதுக.

i. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள **நுவரேலியா மாவட்டம்**G,H,J
ii. இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள **பருத்தித்துறை** A,B, C
iii.இரத்தினக்கற்களுக்கு சிறப்பிடமான **இரத்தினபுரி** D,E,F
iv. மீன்பிடிக்கு சிறப்பிடமான**சிலாபம் கடல்நீரேரி** O,P,R
v. இலங்கையின் கிழக்கே அமைந்துள்ள**திருகோணமலைத் துறைமுகம்**K,L,M (1x5புள்ளிகள்)

பகுதி - 11

2) 1. கற்கோளத்தின் **இரண்டு** பகுதிகளும் எவை? (02 புள்ளிகள்)



kalvi.lk

ii. கற்கோளத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தும்போது ஏற்படும் பாதிப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

iii. மையத்தின் **இரண்டு** பிரிவுகளையும் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

3) i. (a). முதன் முதல் காலநிலை பற்றிய கருத்தை வெளியிட்டவர் யார்? (01 புள்ளி)

(b). பிற்காலத்தில் காலநிலை பற்றிய பாகுபாட்டை குறிப்பிட்ட நபர்களில்ஒருவரைக் குறிப்பிடுக? (01 புள்ளி)

ii. உலகின் அகலக்கோடு, வெப்பநிலைப்பரம்பலை அடிப்படையாகக்கொண்ட பாகுபடுத்தப்பட்ட **மூன்று**காலநிலை வலயங்களையும் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

iii. (a).மத்திய அகலக்கோட்டுக்கு அண்மையிலுள்ள காலநிலை வலயம் எது? (01 புள்ளி)
(b).மேற்குறிப்பிட்ட காலநிலை வலயத்தின் விசேட பண்புகள் **இரண்டு** குறிப்பிட்டு விளக்குக? (04 புள்ளிகள்)

4) i. பிரதான கோதுமை உற்பத்தி நாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (02 புள்ளிகள்)

ii. கோதுமைச்செய்கைக்கு சாதகமான பௌதீகக்காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக?(03 புள்ளிகள்)

iii.கோதுமை உற்பத்தியை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் **இண்டு** நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றினை**சுருக்கமாக விபரிக்குக? (05 புள்ளிகள்)

5)iஇலங்கையில் படிமுறை அமைப்பில் நெல் பயிரிடப்படும் மாவட்டங்கள்**இரண்டு**தருக. (02 புள்ளிகள்)

ii. இலங்கையில் நெற்செய்கைக்கு பொருத்தமான பின்வரும் காரணிகளைக் குறிப்பிடுக? (03புள்ளிகள்)
(a).மழைவீழ்ச்சி (b).வெப்பநிலை (c).மண்வகை

iii. இலங்கையில் நெற்செய்கை முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை**விளக்குக? (05 புள்ளிகள்)

6) i. இலங்கையில் மந்தை வளர்ப்பு இடம்பெறும் **இரண்டு** மாவட்டங்களைத் தருக?(02புள்ளிகள்)

ii.பால் உற்பத்திப்பொருட்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

iii.விலங்கு வேளாண்மையில் அண்மைக்காலம் முதல் விசேட கவனம் செலுத்தப்படுவதற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றை** விவரிக்குக? (05 புள்ளிகள்)

7) i. இலங்கையில் விவசாயம்சார் பிரச்சினைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (02 புள்ளிகள்)

ii. விவசாயத்தின் நவீன போக்குகளில் **மூன்றினைத்** தருக?(03 புள்ளிகள்)

iii.இலங்கின் விவசாயத்தைமேம்படுத்துவதில் அரசின் ஆதரவு **இரண்டினைக்** குறிப்பிட்டு

அவற்றில் **ஒன்றினை**விவரிக்குக? . (05 புள்ளிகள்)

8) i.தயாரிப்புக் கைத்தொழிலின் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில்,

a) சக்தி மற்றும் வலுசார்ந்த காரணி **ஒன்றைத்** தருக. (01 புள்ளி )

b) மூலப்பொருள்சார்ந்த **ஒரு** காரணியைக் குறிப்பிடுக? (01 புள்ளி)

ii. தயாரிப்புக் கைத்தொழில்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

iii.இரும்பு உருக்குக் கைத்தொழிலின் போக்குகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றினை**விவரிக்குக? (05 புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடக்குமாகாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை – 2021

தரம் :- 10 புவியியல் II சுட்டெண்:

1.(அ)

பரீட்சகரின் உபயோகத்திற்கு

i. ……………………………………………………………………………………

ii. ……………………………………………………………………………………

iii. ……………………………………………………………………………………

iv. ……………………………………………………………………………………

v. ……………………………………………………………………………………

vi. ……………………………………………………………………………………

vii. ……………………………………………………………………………………

viii. ……………………………………………………………………………………

ix. (a)……………………………………………………………………………………


(b)……………………………………………………………………………………

/10



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

வினா – 1.(ஆ)




i.

ii.


iii

iv.

v.

5

வினா – 1.(இ)




i.

ii.

iii.

iv.

v.

5



kalvi.lk


2025
1ம் தவணை வகுப்புகள்
தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
ஆரம்பம் 01.01.2025
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.
அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...
Education கல்வி
Kalvi.lk
Whatsapp
075 287 1457